**சுருக்கம்**

கல்லூரிகள் - கலை மற்றும் அறிவியல் கல்லூரிகள் - கல்வியியல் மற்றும் உடற்பயிற்சி கல்லூரிகள் - தன்னாட்சித் தகுதிநிலை வழங்குவதற்கு பரிந்துரைத்தல் - கொள்கை முடிவு மற்றும் நெறிமுறைகள் வகுத்தல் - ஆணை வெளியிடப்படுகிறது.

---

உயர்கல்வி (இ1)துறை

அரசாணை நிலை எண் 429

நாள் 4/10/2000

படிக்கப்பட்டவை

1. அரசு கடித எண் 28850/இ1/99-1, நாள் 11.2.2000.
2. தமிழ்நாடு மாநில உயர்கல்வி மன்ற உறுப்பினர் -செயலாளரின் கடித எண் ஓ.மு.73/2000. அ நாள் 27.3.2000.
3. கல்லூரிக் கல்வி இயக்குநரின் கடித நாள் 5.6.2000.

*****

ஆணை:

கல்விப் பணியில் தனித்துவத்தையும், சுதந்திரத்தையும் வெளிப்படுத்துவதற்கேதுவாக, 1978-79-ஆம் ஆண்டு முதல் தமிழ்நாட்டில் உள்ள தகுதி வாய்ந்த கல்லூரிகளுக்குத் தன்னாட்சித் தகுதி வழங்கப்பட்டு வருகின்றது. பல்கலைக் கழக நல்கைக் குழுவும் இதனை ஊக்குவித்து வருகிறது. தமிழ்நாட்டில், இதுகாறும், 8 அரசுக் கல்லூரிகளுக்கும், 36 அரசு நிதியுதவி பெறும் கல்லூரிகளுக்கும் தன்னாட்சித் தகுதி வழங்கப்பட்டுள்ளது.

2. .அரசு மற்றும் அரசு நிதியுதவி பெறும் கல்லூரிகளுக்கு மட்டும் இதுகாறும் தன்னாட்சித் தகுதி வழங்கப்பட்டு வந்துள்ள நிலையில், சுயநிதியில் அமையப் பெற்ற தனியார் கல்லூரிகளில் சில தற்போது, தங்கள் கல்லூரிகளுக்கும் தன்னாட்சித் தகுதி வழங்க வேண்டி விண்ணப்பித்துள்ளன. பார்வை 1-ல் படிக்கப்பட்ட அரசு கடிதத்தில் தனியார் சுயநிதி கல்லூரிகளுக்கும் தன்னாட்சித் தகுதி வழங்குவது குறித்து தமிழ்நாடு மாநில உயர்கல்வி மன்ற உறுப்பினர் - செயலாளர் மற்றும் கல்லூரிக் கல்வி இயக்குநரின் ஆலோசனைகள் கோரப்பட்டு பார்வை 2 மற்றும் 3-ல் படிக்கப்பட்ட கடிதங்களின் வழி அவை பெறப்பட்டன.

3. கல்லூரிகளுக்கு தன்னாட்சித் தகுதி, பல்கலைக் கழக நல்கைக் குழு இசைவுடன் வழங்கப்பட்டாலும் அதற்கு முன்னர் மாநில அரசின் பரிந்துரை பெறப்படவேண்டும் என்று பல்கலைக் கழக நல்கைக் குழு நெறிமுறைகளில் பிரிவு 7 (சி)-ல் வகை செய்யப்பட்டுள்ளது. கலை மற்றும் அறிவியல் கல்லூரிகள், கல்வியியல் மற்றும் உடற்பயிற்சிக் கல்லூரிகள் ஆகியவற்றிற்கு தன்னாட்சித் தகுதி வழங்குவது பற்றி தமிழ்நாடு மாநில உயர்கல்வி மன்றம் மற்றும் கல்லூரிக் கல்வி இயக்குநரின் ஆலோசனைகளை அரசு நன்கு கவனமுடன் ஆய்வு செய்தது. இதுகாறும் அரசு, அரசு உதவிபெறும் கலை மற்றும் அறிவியல் கல்லூரிகள், கல்வியியல் கல்லூரிகள் மற்றும் உடற்பயிற்சி கல்லூரிகளுக்கு வழங்கப்பட்டு வந்த தன்னாட்சித் தகுதிநிலையை சுயநிதி கலை மற்றும் அறிவியல் கல்லூரிகள், கல்வியியல் மற்றும் உடற்பயிற்சிக் கல்லூரிகளுக்கும் நீட்டித்து வழங்க அரசு கொள்கை முடிவு எடுத்து அதனடிப்படையில், அரசு, அரசு உதவிபெறும் கல்லூரிகள் மற்றும் சுயநிதி கலை மற்றும் அறிவியல் கல்லூரிகள், கல்வியியல் மற்றும் உடற்பயிற்சிச் கல்லூரிகள் ஆகியவற்றிற்கு பல்கலைக் கழக நல்கைக்குழுவி ன் நெறிமுறைகளையொட்டி, தன்னாட்சி த் தகுதி நிலை வழங்குவதற்கு, அரசு பரிந்துரை செய்வதில், ஒரு சீரான நடைமுறையை கடைப்பிடிக்கவும், தன்னாட்சிப் பெறக்கூடிய கல்லூரிகளின் செம்மையான செயல்பாட்டை உறுதி செய்யவும் கீழ்க்கண்டுள்ளவாறு, தகுதியுடைய கல்லூரிகளுக்குத் தன்னாட்சித் தகுதிநிலை வழங்குவதற்கேதுவாக இணைப்பில் கண்டுள்ளவாறு கடைப்பிடிக்கவேண்டி நெறிமுறைகளை அரசு வகுத்துள்ளது.

1. கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளைப் பொறுத்தவரையில் 10 ஆண்டுகள் நிறைவு பெற்றிருக்க வேண்டும். குறைந்த பட்சம் 2 பட்ட மேற்படிப்பு வகுப்புகள் கொண்டிருக்கவேண்டும்

2. கல்வியியல் மற்றும் உடற்பயிற்சி கல்லூரிகளைப் பொறுத்தவரையில் 10 ஆண்டுகள் நிறைவுபெற்றிருக்கவேண்டும், பட்ட மேற்படிப்பு வகுப்பினைக் கொண்டிருக்க வேண்டும்.

3. தேசீய மதிப்பீட்டு வாரியத்தால் குறைந்த பட்சம் 4 நட்சத்திர தரம் மதிப்பீட்டுச் சான்றுகள் பெற்றிருக்க வேண்டும்.
மேற்காண் கல்லூரிகளுக்கு தன்னாட்சி த் தகுதி நிலை வழங்க கோரும் நிகழ்வுகளில் பல்கலைக் கழக நல்கைக் குழுவிற்கு மாநில அரசின் பரிந்துரையினை அளிக்கும்போது அந்நெறிமுறைகளை தவறாமல் கடைப்பிடிக்க வேண்டும் என அரசு ஆணையிடுகிறது

4. மேலும், தன்னாட்சித் தகுதி நிலை அளிக்க வேண்டி விண்ணப்பிக்கும் கல்லூரிகளை ஆய்வு செய்வதற்கு ஏதுவாக இணைப்பில் பத்தி மி (3)-ல் குறிப்பிடப்பட் டுள்ளவாறு ஐவர் கொண்ட ஆய்வுக்குழுவினை கல்லூரிக் கல்வி இயக்குநர் தலைமையில் அமைத்து செயல்பட அரசு மேலும் ஆணையிடுகிறது

(ஆளுநரின் ஆணைப்படி)

இ.வீ.மணிவண்ணன்,
அரசு செயலாளர்.

பெறுநர்

கல்லூரிக் கல்வி இயக்குநர் சென்னை-6.
மண்டல கல்லூரிக் கல்வி இணை இயக்குநர்கள்
அனைத்து பல்கலைக் கழக பதிவாளர்கள்
மாண்புமிகு முதலமைச்சரின் செயலாளர், சென்னை-9.
மாண்புமிகு கல்வியமைச்சரின் இணைச செயலாளர், சென்னை-9

உயர்கல்வி( ஜி, ஜே, பி, கே, எச் )த்துறை , சென்னை-9
பள்ளிக் கல்வித்துறை, சென்னை-9.

**<u>இணைப்பு</u>**

**<u>கலை மற்றும் அறிவியல் கல்லூரிகள், கல்வியியல் மற்று உடற்பயிற்சி கல்லூரிகளுக்கு தன்னாட்சித் தகுதிநிலை வழங்க பல்கலைகக் கழக நல்கைக் குழுவிற்கு பரிந்துரை செய்யும்போது கடைப்பிடிக்கப்பட வேண்டிய நெறிமுறைகள்:</u>**

1. பல்கலைக் கழகத்திற்கும் பல்கலைக் கழக நல்கைக் குழுவிற்கும் தன்னாட்சித் தகுதி வேண்டி விண்ணப்பிக்கும்போதே 5 விண்ணப்ப படிவங்களை அரசுக்கு அனுப்ப வேண்டும்

2. ஆய்வுக் கட்டணமாக ரூ.20,000./- கல்லூரிக் கல்வி இயக்குநருக்குச் செலுத்தப்படவேண்டும்.

3. விண்ணப்பம் பெறப்பட்டவுடன் கீழ்க்கண்ட நபர்களைக் கொண்டு அரசு ஓர்ஆய்வுக் குழுவினை அமைக்கும் .

அ) கல்லூரிக் கல்வி இயக்குநர் - தலைவர்

ஆ) தமிழ்நாடு மாநில உயர்கல்வி மன்றப் பிரதிநிதி - உறுப்பினர்

இ) தமிழ்நாட்டிலுள்ள ஏதாவது ஒரு பல்கலைக் கழகத்தின் மூத்த பேராசிரியர் ஒருவர் - உறுப்பினர்

ஈ) தன்னாட்சிப் பெற்ற அரசு கல்லூரி முதல்வர் ஒருவர் - உறுப்பினர்

உ) தன்னாட்சிப் பெற்ற அரசு உதவிபெறும் கல்லூரி முதல்வர் ஒருவர் - உறுப்பினர்

**<u>ஆய்வின்போது, குழு கீழ்கண்டவற்றை கருத்தில் கொள்ள வேண்டும்.</u>**

**<u>1. பொது</u>**

அ கல்லூரியில் உள்ள தளவாட வசதிகள்.
ஆ போதுமான அளவில் கட்டடங்கள் உள்ளமை.
இ. ஆய்வுக் கூடங்கள்.
ஈ. நூலகம் (புலவாரியாக நூல்களின் தொகுப்பு மற்றும் இதழ்களின் எண்ணிக்கை மற்றும் இதர வசதிகள்)
உ. இயந்திரங்களும் கருவிகளும்.
ஊ .கணிப்பொறி வசதிகள்.
எ. ஆசிரியர் பயிற்றுவிப்புச் சாதனங்களும் மற்றும் உபகரணங்களும்.

**<u>2. ஆசிரியர் தகுதி மதிப்பீடு</u>**

அ) ஆசிரியர் பட்டியல்
ஆ) கல்வித் தகுதி (ஷிலிணிஜி/ழிணிஜி)எம்.ஃபில் மற்றும் பி.எச்டி.
இ) .நூல்வெளியீடுகள்
ஈ) ஆய்வு வசதிகள் உள்ளமை.

3.. கடந்த 3 மூன்றாண்டுகளில், ஆசிரியர் போராட்டங்களினால் ஏற்பட்ட வேலை நாள் இழப்பு.

4. ஆசிரியர் மற்றும் ஆசிரியரல்லா பணியாளர்களின் நியமனங்களில் இனச்சுழற்சி முறை பின்பற்றுதல்.

5. பணியாளர் குறைகளை நிவர்த்தி செய்யும் திட்ட வகைகள்

6. மாணவர்ச் சேர்க்கையில் தமிழக அரசின் இட ஒதுக்கீட்
டுக் கொள்கையைக் கடைப்பிடிக்கவேண்டும். கடந்த 3 ஆண்டுகளின் மாணவர் சேர்க்கைப்பற்றிய விவரங்கள் குறிப்பிடப்படவேண்டும். ( வகுப்புவாரியாக பொது / பிற்ப டுத்தப்பட்டவர் / மிகவும் பிற்படுத்தப்பட்டவர் / தாழ்த்தப்பட்ட வகுப்பினர் / பழங்குடி வகுப்பினர்.)

7. கடந்த மூன்றாண்டுகளில் வேலை நாட்கள் எண்ணிக்கை

8. கடந்த மூன்றாண்டுகளில் மாணவர் போராட்டத்தில் ஏற்பட்ட வேலை நாள் இழப்பு.

9. கடந்த மூன்றாண்டுகளில், போராட்டம், தேர்வுகள் ரத்து மற்றும் விழா
க் கொண்டாட்டங்கள் ஆகியவை நீங்கலாக, உள்ள வேலை நாட்கள் விவரம்

10 கல்வி வழிகாட்டும் பிரிவு மற்றும் மாணவர்களின் குறைகள் களையும் பிரிவு ஆகியவை செயல்படும் நிலை

11. மாணவர்கள் பங்கேற்கும் பிற பாடம் மற்றும் கலை தொடர்பான நடவடிக்கைகள்.

அ. துறை மன்றங்கள்
ஆ. போட்டிகள் மற்றும் புதிர் நிகழ்ச்சிகள்
இ விளையாட்டுகள் மற்றும் பந்தயங்கள்
ஈ. தேசீய சேவை திட்டம்
உ .தேசிய மாணவர் படை

12. கடந்த மூன்றாண்டுகளில் வகுப்பு மற்றும் புலம் வாரியாக தேர்ச்சி விவரம்.

<u>மேலாண்மை</u>

நிலம், அறக்கட்டளை மற்றும் அறக்கட்டளையின் குறிக்கோள் மற்றும் கொள்கை (மூல ஆவணங்கள்) அல்லது சான்றொப்பம் பெற்ற நகல்கள்

(i) தமிழ்நாடு தனியார் கல்லூரி (ஒழுங்காற்று) சட்டம்.1976-ன்படி கல்லூரிக் குழுக்களின் கூட்டப்பட்டமைக்கான ஆதாரங்கள்.

(ii) கல்வி மேலாண்மையின் நிதி ஆதார நிலை

(iii) இன்றைய தேதியில் கல்வி முகமையின் சொத்து மற்றும் கடன் விவரங்கள்.

(iv). தணிக்கை செய்யப்பட்ட மூன்றாண்டு கால கல்லூரிக் கணக்குகள்.

(v) .மாணவ / மாணவியர் விடுதி வசதிகள்.

**மேலும் கீழ்க்கண்டவை குறித்து உதவிபெறும் கல்லூரிகள் மட்டும் கூடுதலாக உறுதிமொழி கொடுக்க வேண்டும்.**

தன்னாட்சித் தகுதி பெறுவதன் மூலம்.

i) அரசிடமிருந்து முன்னரும் மற்றும் பின்னரும் கூடுதல் நிதி கோரமாட்டோம்.

ii) றகல்லூரி நடைபெறும் முறைகளில் நடப்பு பணிப்பளுவை பாதிக்க விட மாட்டோம்.

iii) ஆசிரியர் மற்றும் ஆசிரியரல்லா பணியாளர்களில் கூடுதல் தேவை மற்றும் ஆட்குறைப்பு ஆகியவற்றை கோரமாட்டோம்.

iv) அரசின் முன் ஒப்புதல் பெறாமல் நடப்பு வகுப்புகளை மூடமாட்டோம் மற்றும் விலக்கிக் கொள்ள மாட்டோம்.